**சுருக்கம்**

தமிழ்நாடு நீர்வள ஒருங்கிணைப்பு திட்டம், கோதையாறு வடிநில கோட்டம் – இராதாபுரம் பிரதான கால்வாய் ஹனுமாநதி உபவடிநில பகுதிகளில் பிரதான கால்வாய் மற்றும் நீர்த்தேக்கங்கள் மறு சீரமைத்தல் (Package No.4 / IAMWARM / WRD / HMD Works / III /2009-10) திட்டப் பணிக்களுக்கான துறை சார்ந்த நடுவர் திரு A.நாகமணி, கண்காணிப்பு பொறியாளர் (ஓய்வு) அவர்களுக்கு நடுவர் கட்டணமாக ரூ.31,000/-க்கு நிதி ஒப்பளிப்பு அளித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**நீர்வளத் (எஸ்.2) துறை**

**அரசாணை (டி) எண்**.155

நாள்.24.07.2023
சோபகிருது, ஆடி 8
திருவள்ளுவர் ஆண்டு 2054

படிக்கப்பட்டது :

முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), நீர்வளத்துறை சென்னை அவர்களின் கடித எண். தவஅ /முவஅ.1 / கோ.24858/ 2023, நாள் 12.04.2023.

*_*_*

**ஆணை :**

மேலே படிக்கப்பட்ட முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), நீர்வள ஆதாரத்துறை, கடிதத்தில், தலைமைப் பொறியாளர், நீர்வளத் துறை, மதுரை மண்டலம், தமிழ்நாடு நீர்வள ஒருங்கிணைப்பு திட்டம், கோதையாறு வடிநில கோட்டம், இராதாபுரம் பிரதான கால்வாய் ஹனுமாநதி உபவடிநில பகுதிகளில் பிரதான கால்வாய் மற்றும் நீர்த்தேக்கங்கள் மறு சீரமைத்தல் (LS 6210m – 20360m) (Package No.4 / IAMWARM / WRD / HMD Works / III/2009-10) திட்டப் பணிக்களுக்கான துறை சார்ந்த நடுவர் திரு A.நாகமணி, கண்காணிப்பு பொறியாளர் (ஓய்வு) அவர்களுக்கு ரூ.31,000/- (ரூபாய் முப்பத்தோராயிரம் மட்டும்) நடுவர் கட்டணமாக நிதி ஒப்பளிப்பு கோரி பின்வருமாறு கருத்துரு அனுப்பியுள்ளார் எனத் தெரிவித்துள்ளார் :

அ) மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கு எண்.W.P.No.19914/2019 ஆணை நாள் 17.09.2019-ன் படி ஒப்பந்தாரரை உடன்படிக்கையில் தெரிவித்தவாறு

நடுவர்மன்றத்தை அணுகி குறை நிவர்த்தி பெற ஆணையிடப்பட்டது. நீதிமன்ற ஆணைக்கிணங்க துறைசார் நடுவராக திரு A.நாகமணி, M.E., கண்காணிப்புப் பொறியாளர் (ஓய்வு) அவர்கள் நியமனம் செய்யப்பட்டார்.

ஆ) மேற்படி நடுவர் அமர்வு கூட்டங்கள் 15.06.2022, 28.09.2022, மற்றும் 27.10.2022 ஆகிய மூன்று நாட்கள் நடைபெற்ற இறுதி தீர்ப்பு எட்டப்பட்டது. நடுவர் அமர்வு கூட்டங்களின் துறைசார் நடுவருக்கான கட்டணங்களை கீழ்கண்டவாறு கோரி விண்ணப்பித்துள்ளார்.

திரு A.நாகமணி, M.E., கண்காணிப்புப் பொறியாளர் (ஓய்வு) (துறைசார் நடுவர்) நடுவர் கட்டணம்

<table>
<tr><td>1.</td><td>இருக்கைக்கு ரூ.15,000 வீதம் 3 இருக்கை</td><td>ரூ.45000</td><td></td><td rowspan="7">ரூ.60400/-<br>50 சதவித<br>அரசின் பங்கு<br>ரூ.30200/-<br>(அ)<br>ரூ.31000/-</td></tr>
<tr><td>2.</td><td>25% கூடுதல் தொகை</td><td>ரூ. 11250</td><td></td></tr>
<tr><td></td><td>மொத்தம்</td><td>ரூ.56250</td><td></td></tr>
<tr><td>3.</td><td>வரையறுக்கப்பட்ட தொகை</td><td></td><td>ரூ.50000</td></tr>
<tr><td>4.</td><td>ஆவணங்கள் மற்றும் ஆவணம் தொடர்புடைய செலவுகள்</td><td>ரூ.5000</td><td></td></tr>
<tr><td>5.</td><td>பயணச் செலவுகள்</td><td>ரூ.5400</td><td></td></tr>
<tr><td></td><td>மொத்தத் தொகை</td><td></td><td>ரூ.60400</td></tr>
</table>

2. மேலும், முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), நீர்வளத்துறை மேற்கண்ட பணிக்கு நடைபெற்ற குறைதீர் நடுவர் அமர்வு கட்டணங்களை பட்டுவாடா செய்வதற்கு நிதி ஒதுக்கீடு மற்றும் அரசின் ஆணையினை பெற்றுத்தர தலைமைப் பொறியாளர், நீர்வளத் துறை, மதுரை மண்டலம், மதுரை கேட்டுக் கொண்டுள்ளார் என்றும் அதனடிப்படையில், நடுவர் அமர்வு கட்டணம் ரூ.31,000/-க்கு நிதி ஒதுக்கீடு பெற்றுத் தருமாறு அரசிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேற்கண்ட முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), நீர்வளத்துறை கருத்துருவினை நன்கு ஆய்வு செய்த பின்னர், அதனை ஏற்க அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி, தமிழ்நாடு நீர்வள ஒருங்கிணைப்பு திட்டம், ஆலந்துரையாறு ஹனுமா நதி உபவடிநில திட்டத்தில் அணைக்கட்டுகள் வழங்கு வாய்கால்களை மறுசீரமைத்தல் (LS 6210m – 20360m) (Package No.1 / IAMWARM / WRD / HMD Works / III / 2009-10) திட்டப் பணிக்களுக்கான துறை சார்ந்த நடுவர் திரு A.நாகமணி, கண்காணிப்புப் பொறியாளர் (ஓய்வு) அவர்களுக்கு ரூ.31,000/- (ரூபாய்

முப்பத்தோராயிரம் மட்டும்) நடுவர் கட்டணமாக நிதி ஒப்பளிப்பு அளித்து அரசு ஆணையிடுகிறது

4. மேலே பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்கண்ட கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

2701 – நடுத்தர பாசனம் – 80 – பொது – 800 – நெறிபடுத்தலும் நிருவாகமும் – மாநிலச் செலவினங்கள் – AF – நிருவாகப் பணியாளரமைப்பு – 333 – தொழில்முறைப் பணிகளுக்குத் தொகை கொடுத்தல் – 01 – அரசு வழக்கு நடத்துனர்கள் கட்டணங்கள்.

(IFHRMS DPC : 2701 –80 –001 – AF – 333 01)

5. மேலே பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை 2023-2024-ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டுள்ள நிதியிலிருந்து மேற்கொள்ளும்படியும், மேலும், ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை மேற்காணும் நடுவர்களுக்கு பெற்று வழங்கிடவும், முதன்மைத் தலைமைப் பொறியாளர் (மற்றும்) தலைமைப் பொறியாளர் (பொது), நீர்வளத்துறை, சென்னை கேட்டுக் கொண்டுள்ளார்.

6. தலைமைப் பொறியாளர், நீர்வளத் துறை, மதுரை மண்டலம், மதுரை அவர்கள் விதிகளை பின்பற்றி மேற்கண்ட நடுவருக்கு தொகையை பெற்று வழங்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.22259/பொ.ப.2/2023, நாள்.18.07.2023-ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**சந்தீப் சக்சேனா,**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**

**பெறுநர்**

முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) நீர்வளத்துறை சென்னை-5.

தலைமைப்பொறியாளர், நீர்வளத்துறை, மதுரை மண்டலம், மதுரை-2.

முதன்மை மாநில கணக்குத் தலைவர், (கணக்குகள் மற்றும் பணிவரவுகள்), சென்னை-18.

சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை – 8.

மாவட்ட கருவூல அலுவலர், நாகர்கோவில்.

சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், மதுரை.

உடனுறைத் தணிக்கை அலுவலர். (The Resident Audit Officer, O/o. Principal Accountant General (General and Social Sector Audit), தலைமைச் செயலகம், சென்னை-9.

<u>**நகல்**</u>

நிதி (வ.செ.பொ.II / பொ.ப.II / வ.செ.பொ.I), தலைமைச் செயலகம், சென்னை–9.

நீர்வளத் (அநமு 2) துறை, தலைமைச் செயலகம், சென்னை – 9.

இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

24/07/2023

**பிரிவு அலுவலர்**

24/7/2023